**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 480/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-8/PW- 5 | Village: | |
| Name | : செங்குட்டுவன் | Age | :70 |
| Father's/Husband's Name | : கிருஷ்ணசாமி | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 20/03/2023**

சாட்சியை பந்தநல்லூர் காவலர் திரு.பிரபாகரன் 1673 என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். 2 வது எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.4 ம் எதிரி இறந்துவிட்டார்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது குண்டவெளி கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.4 ஐ எனக்கு தெரியும். கடந்த 2011 ம் ஆண்டு ஒருநாள் மீன்சுருட்டி காவல் நிலையத்திற்கு எங்கள் கிராமம் சம்மந்தபட்ட ஒரு பிரச்சனைக்காக சென்றிருந்தேன். அப்போது போலிசார் என்னிடம் சாட்சி கையொப்பம் போடும்படி கேட்டார்கள். நான் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(மேற்படி**

**ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** )**இந்த வழக்கு சம்மந்தமாக** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 08/06/2012 ம் தேதி காலை 08.00 மணிக்கு நானும் ராமானுஜம் என்பவரும் திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகே நடந்து சென்றபோது மீன்சுருட்டி போலிசார் மீன்சுருட்டி காவல் நிலைய குற்ற எண்.284/2011, சட்டப்பிரிவுகள் 457,380 இதச வழக்கில் சம்மந்தபட்ட எதிரிகள் செந்தில்குமார், பாக்கியராஜ், தியாகராஜன், போத்ராஜ், ராஜேந்திரன் ஆகியோர்களை எங்கள் முன்பு பிடித்து விசாரித்தார்கள் என்றும், அப்போது செந்தில்குமார் என்பவர் தானாக முன்வந்து சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தினை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்கள் என்றும், நானும் ராமானுஜம் என்பவரும் சாட்சிகளாக கைொயப்பம் செய்தோம் என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் எங்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கில் இருந்து காப்பற்ற வேண்டும் என்பதற்காக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**
**THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : CC 480/2019 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : LW-7/PW- 4 | Village: | |
| Name | : ராமானுஜம் | Age | :68 |
| Father's/Husband's Name | : சாமிகண்ணு | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 20/03/2023**

சாட்சியை பந்தநல்லூர் காவலர் திரு.பிரபாகரன் 1673 என்பவர் அடையாளம் காட்டி முன் நிறுத்தியவரை சத்தியபிரமாணம் செய்து முதல் விசாரணை பதியப்படுகிறது.

**1 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில் இருந்தார்கள். 2 வது எதிரி ஆஜரில் இல்லை. அவரது தரப்பில் குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.4 ம் எதிரி இறந்துவிட்டார்.**

**முதல் விசாரணை**:

நான் தற்போது சலுப்பை கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 2010 ம் ஆண்டு ஒருநாள் மீன்சுருட்டி காவல் நிலையத்திற்கு எங்கள் கிராமம் சம்மந்தபட்ட ஒரு பிரச்சனைக்காக சென்றிருந்தேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் விசாரணைக்காக அழைத்து வந்திருப்பதாகவும், அதற்கு சாட்சி கையொப்பம் போடும்படியும் கேட்டார்கள். நான் சாட்சி கையொப்பம் செய்து கொடுத்தேன். வேறு எதுவும் எனக்கு தெரியாது. தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். (**மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது**

**சாட்சி கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )இந்த வழக்கு சம்மந்தமாக** போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் இந்திய சாட்சிய சட்டம் 154 பிரிவின் படி சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அரசு தரப்பின் வேண்டுகோளுக்கிணங்க அரசு தரப்பில் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறது)**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் விசாரணையிலும் வாக்குமூலத்திலும் கடந்த 08/06/2012 ம் தேதி காலை 08.00 மணிக்கு நானும் செங்குட்டுவன் என்பவரும் திருப்பனந்தாள் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகே நடந்து சென்றபோது மீன்சுருட்டி போலிசார் மீன்சுருட்டி காவல் நிலைய குற்ற எண்.284/2011, சட்டப்பிரிவுகள் 457,380 இதச வழக்கில் சம்மந்தபட்ட எதிரிகள் செந்தில்குமார், பாக்கியராஜ், தியாகராஜன், போத்ராஜ், ராஜேந்திரன் ஆகியோர்களை எங்கள் முன்பு பிடித்து விசாரித்தார்கள் என்றும், அப்போது செந்தில்குமார் என்பவர் தானாக முன்வந்து சொன்ன ஒப்புதல் வாக்குமூலத்தினை எங்கள் முன்னிலையில் பதிவு செய்தார்கள் என்றும், நானும் செங்குட்டுவன் என்பவரும் சாட்சிகளாக கைொயப்பம் செய்தோம் என்றும், இவ்வழக்கு சம்மந்தமாக போலிசார் எங்களையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள் என்றும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை இவ்வழக்கில் இருந்து காப்பற்ற வேண்டும் என்பதற்காக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை.**

கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜரில் இருந்தார். குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டு குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

N SIVAPALANI Digitally signed by N SIVAPALANI

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**திருவிடைமருதூர்.**